# பொன் கதைக்கொத்து

எழுதினவர் :

**K. P. சந்தோஷம், B.A., L.T.,**

(ஆங்கில ஆசிரியர்)

**C. S. இராஜாப் பிள்ளை**

(தலைமைத் தமிழ்ப் பண்டிதர்)

ஊரிஸ் காலேஜ், வேலூர்.

MADRAS

வேலூர்

பா. திருவேங்கட ரங்கநாதம் கம்பெனியாரால்

வெளியிடப்பட்டது.

# முன்னுரை

இந்நூலில் அடங்கிய கதைகள், பொன்னைப் பற்றிக் கூறுகின்றமையால், "பொன் கதைக் கொத்து" என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

நமது நாட்டில் எண்ணிறந்தனவாக இருக்கும் புராணக் கதைகளையும், இதிகாசக் கதைகளையும், அறிவுடைப் பெரியார் பலர் சிறு நூல்களாகவும், பெருநூல்களாகவும் உரை நடையில் எழுதி வெளியிட்டிருத்தலினாலும், பிற நாட்டுப் புலவர்கள் எழுதிய கதைகளின் நோக்கமும், அவர்கள் உள்ளம் செல்லும் வகையும் நமது நாட்டு இளைஞர்கள் உணர்தல் நன்மை பயக்குமெனத் தோன்றியதனாலும் அட்டவணையிற் கண்டபடி பல ஆங்கில நூல்களிலிருந்த கதைகளைத் திரட்டி இந்நூலை வெளியிட்டிருக்கின்றோம்.

இந்நூல் மாணவர்களுக்கு உபயோகமாகும்படி எளிய தமிழ் நடையில் எழுதியிருப்பதால் கல்வித் துறைத் தலைவர்கள் ஆதரித்து, எங்களை மேன்மேலும் ஊக்கமுண்டாகும்படி செய்ய வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

வேலூர்,
15-2-'29.

K. P. சந்தோஷம்.
C. S. இராஜாப் பிள்ளை.

# பொருளடக்கம்.

---

1. பொன் தட்டு (Norton's Courtesy Reader) ... 7

2. மரத்தின் கீழிருந்த புதையல் (Chaucer's Canterbury Tales) ... 11

3. பதுமையிலுள்ள எழுத்து (Earthly Paradise) ... 17

4. தொட்ட தெல்லாம் பொன் (Nathaniel Hawthorne) ... 28

# பொன் கதைக்கொத்து

## 1. பொன் தட்டு

நாம் வசிக்கும் இந்தியா தேசத்தின் வட பாகத்தில் கங்கை என்னும் புண்ணிய நதி ஒன்று ஓடுகிறது. அந்நதியின் கரையில் காசி என்னும் பெயருடைய ஒரு பெரிய நகரம் இருக்கிறது; முன்னொரு காலத்தில் அந்தக் காசியிலுள்ள பெரிய கோயிலில் ஒரு பொன் தட்டு வந்து விழுந்தது; அந்தக் கோயில் குருக்கள் எல்லாரும் அந்தப் பொன் தட்டை எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்தார்கள்; அதில், "பிறரிடத்தில் உண்மையான அன்புடையவனுக்கு இத்தட்டு கடவுளால் கொடுக்கப்படும் பரிசு" என்று எழுதியிருந்தது. அதைப் பார்த்து, குருக்கள் கடவுளின் கருணையைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். பின் பிறரிடத்தில் அன்பு செய்வதில் முதன்மையானவனைக் கண்டுபிடிப்பது எப்படி என்று ஆலோசித்து, "பிறரிடத்தில் உண்மையான அன்புடையவனுக்குக் கொடுக்கும்படி ஒரு பொன் தட்டை கடவுள் எங்களிடம் கொடுத்திருக்கின்றார்; பிறரிடம் அன்பு செய்வதாகத் தங்களை மதித்து

கொள்பவர்கள் மத்தியான வேளைகளில் இங்கே வரவேண்டியது; நாங்கள் அவர்களை விசாரித் தறிந்து, தகுதியுடையவனுக்கு அதைக் கொடுப் போம்" என்று எல்லாரும் அறியும்படி விளம் பரஞ் செய்தார்கள்.

அந்தச் செய்தி வெகு சீக்கிரத்தில் நகரம் முழுதும் பரவியது. பரவிய வுடன் எல்லாப்பக் கங்களிலிருந்தும் பிரபுக்களும், அறிவு நிறைந்த பெரியோர்களும், துறவிகளும் அடியார்களும் தாங்கள் கடவுளின் பொன் தட்டைப் பெறக் கூடியவர்களாகவே தங்களை மதித்துக் கொண்டு, கூட்டங் கூட்டமாய் வந்து கூடினார்கள். குருக் களும் சபை கூடி ஒரு வருஷம் வரையில் அவரவர்களுடைய வரலாறுகளை விசாரித்தறிந் தார்கள். கடைசியாக, அங்கு வந்தவர்களில் ஒருவன் தன்பண முழுவதையும் ஏழைகளுக்கே கொடுத்து உதவி செய்ததை யறிந்து அவனே மற் றவர்களைவிட ஜனங்களிடத்திற் பேரன்புடைய வன் என்று நிச்சயம் பண்ணி, அப்பொன் தட்டை அவனிடங் கொடுத்தார்கள். அவன் கைநீட்டி வாங்கியவுடன் அப்பொன் தட்டு ஈயமாக மாறி விட்டது. எல்லாரும் இதைப் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள். தட்டை வாங்கினவன் அச்ச மடைந்து அதைக் கீழேவைத்தான். வைத்த வுடன் முன்போலப் பொன் தட்டாக மாறிற்று. இப்படியேகுருக்கள் மறுபடியும்பலரை விசாரித்து,

அன்புடையவர் களென்று தங்களுக்குத் தோன்றிய மூன்று பேருக்குக் கொடுத்தார்கள். அப்பொழுதும் அது முன்போல ஈயமாகவே மாறிவிட்டது. இப்படியே இரண்டு வருஷங்கள் கழிந்தன; நிற்க, இவ்விடத்திற் பலர் பொன் தட்டைப் பெறுதற்காகக் கூடுகிறுர்கள் என்பதையறிந்த முடவர்களும், குருடர்களும் தங்களுக்கு ஏதாவது பிச்சை கிடைக்கு மென்று, அக்கோயிலுக் கெதிரில் இரண்டு பக்கங்களிலுங் கூட்டங் கூட்டமாய்க் காத்திருந்தார்கள்; பொன் தட்டை வாங்கப் போகிறவர்கள் வழியில் காத்துக் கொண்டிருந்த ஏழைகளுக்குத் தராளமாகப் பொருளை வாரி இறைத்துக் கொண்டே போனுர்கள்; ஆனுல் ஒருவராவது அவ்வேழைகளின் முகத்தைக் கருணையோடு பார்க்கவேயில்லை; இப்படியிருக்கும் போது ஒரு நாள் ஒரு குடியானவன் தான் வேண்டிக் கொண்ட காணிக்கையைச் செலுத்துவதற்காக அக்கோயிலுக்கு வந்தான்; அவனுக்கு அக்கோயிலில் நடக்கும் விசேஷம் ஒன்றுமே தெரியாது; அவன் வரும் வழியில் இரண்டு கண்களு மில்லாத ஒரு முடவன் ஒரு உதவியும் இல்லாமற் படுத்திருப்பதைப் பார்த்தான்; பார்த்த வுடனே அவன் மனம் உருகிற்று; கண்கள் நீர் சொரிந்தன; அக்குடியானவன், உதவியற்றுக் கிடக்கும் அந்த ஏழையைப் பார்த்தபின் அவ்விடத்தை விட்டு நீங்க மனமில்லாதவனுய், அவனருகிற் சென்று

உட்கார்ந்து, "என் சகோதரனே! உனக்குவந்த இந்தக் கஷ்டங்களை அநுபவிப்பதில் நீ கவலை கொள்ள வேண்டாம்; கடவுள் நன்மை செய்வார்", என்று இனிய மொழிகள் சொல்லிவிட்டு, எழுந்து கோயிலுக்குப் போனான். அங்கே பலர் தங்களுடைய தருமச் செயல்களைப்பற்றி மிகவும் விஸ்தாரமாகப் புகழ்ந்து பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து விசன மடைந்து, அவ்விடத்திலிருக்க மனமில்லாமல் வேறிடம் போகத் திரும்பினான். அப்பொழுது பொன் தட்டைக் கையில் வைத்திருந்த குருக்களுடைய மனத்தில் ஏதோ ஓர் எண்ணம் திடீரென்று தோன்ற, அவர் அக்குடியானவனை யழைத்து, பொன் தட்டை நீட்டினார்; அவனும் ஒன்றுந் தோன்றாமலே குருக்கள் வார்த்தையை மறுப்பதற்கு அஞ்சி வாங்கினான். வாங்கியவுடன் அத்தெய்வத் தன்மையுள்ள பொன் தட்டு, முன்னிலும் அதிகமாக ஒளி வீசியது. யாவரும் வியப்புற்றார்கள். குருக்கள், அக்குடியானவனை நோக்கி, "தம்பீ! இது கடவுளால் கொடுக்கப் பட்டது, நீ இங்குள்ளவர்களை விட உயிர்களிடத்து அன்பாயிருக்கின்றாய் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம்", என்றார்.

எல்லாரும் அவனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

---

## 2. மரத்தின் கீழிருந்த புதையல்

ஓர் ஊரில் உள்ள சத்திரத்தின் திண்ணையில் ஒருநாள் அறிவில்லாத மூன்று வாலிபர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தத் தெருவழியாகப் பறையடித்துக் கொண்டுபோன சத்தங் கேட்டு அம் மூவரும் எழுந்து தெருவில் வந்து பார்த்தார்கள்; பார்த்ததும் பிணந் தூக்கிக் கொண்டு போகிறதாகத் தெரிந்து, ஒரு மனிதனைக் கூப்பிட்டு, யார் இறந்து விட்டார்கள் என்று கேட்டார்கள்.

அதற்கு அம்மனிதன், "இவ்வூரில் வெகு நாளாக ஒரு கிழவர் இருந்தார்; நேற்று இரவு திடீரென்று இறந்து போய்விட்டார்; அவரைப் புதைப்பதற்காகச் சுடுகாட்டிற்குத் தூக்கிக்கொண்டு போகிறார்கள்" என்றான். வாலிபர்கள் "அந்தக் கிழவரைக் கொன்றவன் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு அம்மனிதன், "இவ்வுலகத்தில் யமன் என்ற பெயரையுடைய ஒருவன் இருக்கிறான்; அவன்தான் எல்லா வுயிர்களையுங் கொண்டு போகிறவன்; அவன் வருவதும் போவதும் யாருக்குந் தெரியாது; அவன் நல்லவர்களென்றும் கெட்டவர்களென்றும் பார்க்க மாட்டான்; பணக்காரர்களென்றும் ஏழைகளென்றும் நினைக்க மாட்டான்; இளையவரென்றும், கிழவரென்றும் எண்ணமாட்டான்; எல்லா வுயிரையு

கொண்டு போய் விடுவான் ; அந்த யமனை வெல்லு தற்கு யாவராலும் ஆகாது ; அந்தப் பொல்லாத யமனே நேற்றிரவு தூங்கிக் கொண்டிருந்த இக் கிழவனுயிரையுங் கொண்டு போய் விட்டான் " என்றான்.

இதைக் கேட்ட வாலிபர்களில் ஒருவன், "ஓ! ஓ!! யமனா? நான் அவனுடைய கொடுமை களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன் ; அவன் சில நாளாக இந்த ஊரில் அநேக ஆண்களையும் பெண்களையுங் கொன்று கொண்டே வருகிறான் " என்றான்.

இதனைக் கேட்ட மற்றொரு வாலிபன் மற்றை யிரண்டு பேரையும் பார்த்து, "நண்பர்களே! அப் படிப்பட்ட பொல்லாத யமனை இந்த உலகத்தி லேயே யில்லாதபடி செய்து விடவேண்டும்; வாருங்கள் ; அக்கொடிய யமனைத்தேடிப் பிடித் துக் கொல்லலாம்" என்றான்.

உடனே மூன்று மூடர்களும் ஒன்றாகச் சேர்ந்து, யமனைத் தேடிக்கொண்டு புறப்பட்டுப் போனார்கள். சிறிது தூரம் போனபிற்பாடு எதிரில் தலை நரைத்து உடல் தளர்ந்த ஒரு கிழவர் முக்காடிட்டுக் கொண்டு தள்ளாடித் தண்டு ஊன்றி நடந்து வந்தார் ; அவரைக்கண்ட வாலிபரி லொருவன், " கிழவா ! நீ ஏன் முக்காடு போட்டுக் கொண்டு வருகிறாய் ; இதுவரை யில் ஏன் சாகாமலிருக்கிறாய்" என்று அதிகாரத்

துடன் கேட்டான். கிழவர் தள்ளாடிக்கொண்டே, "அப்பா! யமன்வந்து என்உயிரைக் கொண்டு போகவில்லையே; அவன் எப்பொழுது வருவானென்று காத்துக் கொண்டிருக்கிறேன்; என்னுடைய கிழத்தனத்தை எடுத்துக் கொண்டு, தங்களுடைய இளமைப் பருவத்தைக் கொடுப்பவர்கள் ஒருவரு மில்லாதபடியால், யமன் வருமட்டும் பொறுமையாகக் காத்திருக்கிறேன்" என்றார்.

இளைஞர் மூவரும் இக்கிழவர் பேச்சைக் கேட்டு, "எங்கேபார்த்தாலும் யமனுடைய பேச்சாகவேயிருக்கிறது" என்று சொல்லி நகைத்தார்கள்; மறுபடியும் கிழவரைப் பார்த்து, "ஐயா! தினந்தோறும் அநேக மக்களைக் கொல்லுகின்ற யமனைத் தேடிப்பிடித்துக் கொல்லுதற்காகவே நாங்கள் புறப்பட்டுப் போகிறோம்; அந்த யமன் எங்கே இருக்கிறான்? உமக்குத் தெரியுமானால் சொல்லும்" என்று கேட்டார்கள். கிழவர் முக்காட்டை நீக்கி அவர்களை விழித்துப் பார்த்து "இதோ தெரிகின்ற இந்தச் சிறுவழியைத் தொடர்ந்து போனால் எதிரில் ஒரு தோப்பு தெரியும்; அத்தோப்பில் ஓங்கி வளர்ந்திருக்கிற தேக்கு மரம் ஒன்று இருக்கிறது; அம்மரத்தடியில் இரண்டு நாழிகைக்குமுன் அந்த யமனைப் பார்த்தேன்; இப்பொழுதும் அங்கேதா னிருப்பா னென்று நினைக்கிறேன்; நீங்கள் மூவரும் விரை வாகப் போனால் அவனை அம்மரத்தடியில் பார்க்கலாம்,

என்று சொல்லிப் போய் விட்டார். பிறகு அறிவில்லாத அந்த மூன்று இளைஞரும் கிழவர் சொன்ன வழியே ஓடித் தோப்பை யடைந்தார்கள். அந்தத் தோப்பை யடைந்த மூன்று வாலிபர்களும் கிழவர் சொன்ன தேக்க மரம் எங்கேயிருக்கிற தென்று பார்த்துக் கொண்டே விரைவாக ஓடி அம்மரத் தடியைச் சேர்ந்தார்கள்.

அவ்விடத்தில் வெள்ளியும் பொன்னும் குவியல் குவியலாகக் கிடக்கக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள்; இனிமேல் தங்கள் ஆயுள் காலம் வரையில் யாதொரு குறைவுமில்லாமல் இன்பமாகக் காலங் கழிக்கலாமென்று பேசி மகிழ்ந்தார்கள்; அந்த நாணயங்களைக் கைகளில் அள்ளி அள்ளிப் பார்த்துக் களிப்படைந்தார்கள்; பணத்தைக் கண்டவுடன் யமனைப் பற்றிய எண்ணம் அவர்கள் மனத்தை விட்டு ஓடிவிட்டது. பணத்தைக்கண்ட பெரு மகிழ்ச்சி சற்று அடங்கியபிறகு, இப்பணக் குவியலை எப்படித் தங்கள் வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதென்று ஆலோசித்தார்கள்.

அப்பொழுது ஒருவன் "இப்பணக்குவியலை வாரிக்கொண்டு பகல் வேளையிற் போகக் கூடாது; போகும் போது யாராவது நம்மைப் பார்த்து விட்டால் திருடர்களென்று நினைத்து நம்மைப் பிடித்துக் கொள்வார்கள்; ஆதலால் சூரியன் மறைந்து இருட்டாகும் வரையில் நாம் இங்கே காத்துக் கொண்டிருப்பதே நல்லது" என்று சொன்னான்.

இதைக்கேட்ட மற்ருெருவன், "ஆம் நீ சொல்வது சரிதான் ; பொழுது போகும் வரையில் நாம் இங்கே காத்திருந்தால், நமக்கு உண்ண உணவும், குடிக்கத் தண்ணீருங் கொண்டு வந்து கொடுப்பவர்கள் யார் ? நமக்குள் யாராவது ஒருவர்தான் கொண்டு வரவேண்டும் ; அதுவரையில் இரண்டு பேரும் இங்கே காத்திருக்கவேண்டும் ; யார் உணவுகொண்டுவரப் போகிறதென்பதைச் சீட்டுப் போட்டுப் பார்த்து இன்னுரென்று நிச்சயம் பண்ணிக் கொள்ள வேண்டும்" என்ருன்.

மூன்றுபேரும் அதற்குச் சம்மதித்துச் சீட்டுப் போட்டார்கள். சீட்டு மூவரில் இளையவனுக்கு விழுந்தது ; உடனே அவ்விளைஞன் உணவும் பானமும் கொண்டுவர ஊரைநோக்கி விரைந்து சென்ருன். அவன் கண்ணுக்கு மறைவாகப் போன பிறகு, பணக்குவியலைக் காத்துக் கொண்டிருந்த இரண்டுபேரும், உணவுகொண்டு வரப் போனவனைக் கொன்றுவிட்டால் அப்பணத்தைத் தாங்களிருவருமே பங்கிட்டுக் கொள்ளலாமென்று நெடுநேரம் ஆலோசனை பண்ணி, அவன் திரும்பி வந்தவுடன் கத்தியால்குத்திக் கொன்று விட வேண்டியது என்று முடிவு செய்து விட்டுக் காத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இவ்வாறிருக்க, ஊருக்குப் போன இளைஞன் தான் போகும் போதே பலவிதமான தீய எண்ணங்களை எண்ணிக் கொண்டே நடந்தான் :—"இந்தப்

பணக்குவியலை இவர்களுக்குக் கொடாமல் நான் மாத்திரம் அநுபவிப்பதா யிருந்தால் எவ்வளவோ சுகமாக வாழ்வேன்; ஒரு விதமான குறைவும் எனக்கு வராது; என்னைப் போல இன்பமாக வாழக்கூடியவர்களும் இருக்கமாட்டார்களென்றே நினைக்கின்றேன்; எப்படியாவது இப்பொருள் முழுவதையும் நானே அடையும்படியான வழி தேடுவேன்" என்று தனக்குள் பேசிக் கொண்டே ஊரை யடைந்தான்; பிறகு அவன் மூன்று பேர் உண்ணக் கூடிய சாப்பாடும், மூன்று புட்டி சாராயமும் வாங்கினுன்; பின் மருந்துக் கடைக்குப் போய், பொல்லாத விஷம் ஒன்றை வாங்கினுன். வாங்கி அதை இரண்டு சாராயப் புட்டிகளிற் கலந்து அடையாளம் வைத்துக் கொண்டான்; அப்புறம் அவன் உணவையும் சாராயப் புட்டிகளையும் எடுத்துக் கொண்டு விரைவாகப் போய்ப் பணக்குவியல் உள்ள இடத்தை யடைந்தான்.

பணக்குவியலைக் காத்துக் கொண்டிருந்த இருவரும் இளைஞனைக் கண்டவுடன் அவன்மேற் பாய்ந்து கத்தியால் குத்திக் கொன்று விட்டார்கள். பிறகு அவ்விருவரும் இளைஞன் கொண்டு வந்த உணவை யருந்தி விஷங்கலந்த இரண்டு புட்டி சாராயத்தையும் குடித்தார்கள்; குடித்தவுடனே மயங்கிக் கீழே விழுந்து இறந்தார்கள்.

இவ்விதமாக இந்த மூன்று மூடர்களும்

நம்பிக்கைத் துரோகம் செய்ய நினைத்ததனால் மாண்டு போனார்கள்.

அம்மூவரும் மரத்தடியில் யமனைக் கண்டார்கள் என்று சொல்லுவதில் தடையுண்டோ?

---

# 3. பதுமையிலுள்ள எழுத்து.

## I

வளம்பொழி யென்னும் ஒரு அழகான நகரத்தில் மனிதர்கள் வேடிக்கையாகக் கூடும் பொது இடம் ஒன்று உண்டு. அவ்விடத்தில் முன்னொரு காலத்தில் மரத்தாற் செய்த பதுமை யொன்று நிறுத்தப் பட்டிருந்தது. அப்பதுமையின் இடது கை வானத்திற்கு நேராக நீண்டிருந்தது. அப் பதுமை வெயிலிற் காய்ந்தும், மழையில் நனைந்தும் இருநூறு வருஷங்களாக அசையாமலும் அழியாமலும் நின்றது. எத்தனையோ மனிதர்கள் அவ்வழியாகப் பவனி போவார்கள். ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான மனிதர்கள் அவ்விடத்திற் கூடுவார்கள்; கண்டோர் நடுங்கும்படியான பல கொடுஞ் செயல்களும் அவ்விடத்திற் பல தரம் நிகழ்ந்த துண்டு. அப்பதுமை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே வாய் திறவாமலிருந்தது. ஆனால், ஒருவரேனும் அப் பதுமையின் மேலே தூக்கியிருந்த இடது

கையில், "ஈண்டு வெட்டு" என்றெழுதி யிருப்பதைப் பார்க்கவே யில்லை. இப்படி யிருக்கும் போது ஒருநாள், சாவகத் தீவிலிருந்து பல கல்வித் துறைகளிலும் நன்கு பயின்றவனான ஒரு சிறந்த புலவன், சில உண்மைகளைக் கண்டு பிடிக்க விருப்பங் கொண்டு வளம்பொழி நகரத்தை யடைந்தான். அவனுக்கு வளம்பொழி நகரத்தி லுள்ள பதுமை முன்காலத்திருந்த ஒரு கை தேர்ந்த மந்திரக் காரனாற் செய்யப்பட்ட தென்பதும், அதில் ஏதாவது மறைபொருளிருக்கு மென்பதும் முன்னமே தெரியும். ஆனால் அம் மறை பொருள் இன்னதென்று நிச்சயமாகத் தெரியாது. அதையறிய வேண்டு மென்பதே அப்புலவனுடைய முக்கிய நோக்கம்.

அக்கல்விமான் தினந்தோறும் அவ்விடத்தில் வந்து பதுமையையுற்று நோக்கிக் கொண்டே யிருப்பான். அவன் மனத்திற் பல வகையான எண்ணங்கள் உதித்துக் கொண்டேயிருக்கும்.

இவன் அநேக நாள் அந்நகரத்தில் தங்கி யிருந்த படியால் எல்லாரும் அவனை நன்றாக அறிந்து கொண்டார்கள். அவன் நிற்பதை அடிக்கடி பார்க்கின்ற வழிப் போக்கர்கள் அவனுக் குப் பின் கண் சிமிட்டிப் பரிகாசமாக நகைப்பார் கள்; அப்புலவனுக்கும் அது நன்றாகத் தெரியும்; ஆனால் அவன் பதுமையின் இரகசியத்தைக் கண்டு பிடிப்பதில் ஊக்க முடையவனாக இருந்

தானே யல்லாமல், அப்பரிகாசத்தைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை.

இப்படிப் பல நாள் சென்ற பின் ஒரு நாள் அக்கல்விமான், இடது கையை விண்ணிலுயர்த்திக் கொண்டே நின்ற பதுமையை ஊன்றிப் பார்த்து, "ஏ! பதுமையே! உன்னை இவ்வளவு அழகாக வகுத்த கைத்தொழில் வல்லவன் உனக்குப் பேசுந் திறமையையுங் கொடுக்கும் ஆற்றல் உடையவனாகவே யிருக்க வேண்டும்; இதில் சிறிதும் ஐயமில்லை; அவன் அப்படிச் செய்திருந்தால், உன்னிடத்தில் மறைந்திருக்கும் இரகசியத்திற்கு ஒரு வேளை கெடுதிவருமோ என்று பேசுந்தன்மையை அமைக்காமல் விட்டு விட்டான் போலும்" என்று தனக்குள் பேசிக் கொண்டான்.

அப்பொழுது மத்தியான வேளையானபடியால் சூரியன் ஒளி பதுமையின் மேற்பட்டு அதன் நிழல் பூமியில் பட்டது.

கல்விமான் அந்நிழலை ஊன்றிப் பார்த்த போது, மரப்பதுமையினுடைய மேலே தூக்கிய கையின் ஆள்காட்டி விரலினுடைய நிழல் மற்றப் பாகங்களின் நிழலைவிட, சற்று இருண்டு தோன்றியது. அதைப் பார்த்த கல்விமான் யாராவது தன்னைப் பார்க்கின்றார்களா? என்று நாற் புறமுஞ் சுற்றிப் பார்த்து, ஒருவரு மில்லாதது கண்டு, நிழல் விழுந்த இடத்திற்கு விரைந்து போய், தன் உடையினுள் ளேயிருந்து ஒரு கத்தியை எடுத்து

அவ்விடத்தை வளைத்துக் கோடு போட்டான். பிறகு அவன் கோடுபோட்ட இடத்தை நன்றாக அடையாளம் வைத்துக் கொண்டு வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். அவன் பலவிதமான எண்ணங்களை எண்ணிக் கொண்டே படுத்து நெடு நேரம் நித்திரை செய்தான். இரவில் நடுயாமத்தில் ஊரிலுள்ள அரவமெல்லாம் அடங்கிய பிறகு அவன் தனியாக எழுந்து பதுமை நின்ற இடத்திற்கு வந்தான். வரும்பொழுது மண் வெட்டியும் கடப்பாறையுங் கையிற் கொண்டு வந்தான்.

கோடு போட்ட இடத்தை ஊன்றிப் பார்த்து அவ்விடத்திலுள்ள மண்ணைத் தோண்டினான். தோண்டும் பொழுது சத்தங் கேட்காதபடி மெதுவாகத் தோண்டி, மேல் தளத்தைப் பெயர்த்து எடுத்துக் கீழேயுள்ள மண்ணைத் தோண்டி எடுத்துக் கொண்டே போனான். அப்படி ஒரு ஆள் ஆழம் பூமியைப் பறித்தவுடனே மண் வெட்டி வேறொரு உலோகத்தில் மோதிய சத்தம் அவனுக்குக் கேட்டது. உடனே அவன் கீழே குனிந்து மண்ணைக் கைகளால் விலக்கிப் பார்க்க, ஒரு பித்தளை வளையந் தெரிந்தது. அவ்வளையம் ஒரு செம்புத் தகட்டில் பூட்டப் பட்டிருந்தது. அத்தகட்டில் பூங் கொத்துக்களுடன் கூடிய மரங்களும், அஞ்சத் தக்க உருவங்களையுடைய விலங்குகளும், இன்னும்பலவடிவங்களும் அமைக்கப்பட்டு, அது மிகுந்த வேலைத்திறமுடையதாயிருந்தது.

அதுவுமல்லாமல், அத்தகட்டில் ஒருவரு மறியாத பாஷையில் சில சொற்களும் வெட்டப் பட்டிருந்தன.

இவற்றை யெல்லாம் பார்த்த கல்விமான் முதலிற் சிறிது அச்சங் கொண்டான். பின் ஆசை யென்னும் பெருவெள்ளத்தில் முழுகினவனுய் அச்சம் நீங்கி வளையத்தைப் பிடித்திழுத்தான். அதிக வருத்த மில்லாமலே சுலபமாக வளையமும், செம்புத்தகடும் வெளியேவந்து விட்டது. அதன் கீழ் குனிந்து பார்க்க, கல்லினுற் கட்டப்பட்ட படிகள் வரிசையாகத் தோன்றின. வெளியி லிருந்து காற்று அத்துவாரத்திற்குள் நுழைந்தது.

அக்கல்வி மானுடைய மனத்தில் இதுவரை யில் யாவருங் கண்டறியாத நெடிய மாளிகை களையும், இன்பமானவாழ்விற்குரியசாதனங்களையும் பற்றிய எண்ணங்கள் மிகுதியாகத் தோன்றின.

“பழைய காலத்திலிருந்த ஒரு பெரிய அரச னுடைய பொருள்க ளெல்லாம் இவ்விடத்தில் திரட்டி வைக்கப் பட்டிருக்க வேண்டு மென்று எண்ணுகிறேன்; அவற்றை எடுத்துக் கொண்டு உயிருடன் மீண்டுவருவேனுயின், இவ்வளம்பொழி நகரத்திலுள்ளார் எல்லாரையும் விடப் பெரிய பணக்காரனுகி வாழ்வே னல்லவா? கைச்செலவுக் குங் காசில்லாத ஏழைக்கல்விமான் என்ற எண் ணம் சில நாளில் மறைந்து, பெரிய பிரபு என்று உலகம் புகழும்படி மேன்மை யடைவே

னல்லவா ?" என்று தனக்குள் நினைத்துக் கொண்டே, படிக்கட்டுகளின் வழியாகக் கீழேயிறங்கினுன். அவன் செல்லும் வழியின் இருபக்கங்களிலுமுள்ள சுவர்களில், போர் வீரர்களின் படமும், ஒழுக்கத்திலும் உயர்விலும் சிறந்த மன்னர்களின் படமும், எழுதப் பட்டிருந்தன. ஆனுல் அப் படங்கள் இன்னுருடைய உருவ மென்பதை அவன் அறியான். படிக்கட்டுகள் உள்ள வழியில் நல்ல மணங் கமழ்ந்தது ; பல விளக்குகள் வரிசையாக ஏற்றப்பட்டிருந்தன; அவ்விளக்குகளி னெளியால் கல்விமான் எல்லா வற்றையும் நன்ருகக் கவனித்துப் பார்த்துக் கொண்டே சென்ருன்.

## II

இவ்விதமாக எல்லாப் படிகளையுங் கடந்து சென்ற பொழுது அவனுக் கெதிரில் தொங்கவிட்டிருக்கின்ற ஒரு திரை தோன்றியது ; அது பல சித்திர வேலைகளுடன் காணப்பட்டது ; கல்விமான் அத்திரையின் வேலைத்திறமையைக் கண்ட பொழுது மிகுந்த ஆச்சரிய மடைந்து நின்ருன். இன்னும் அத்திரையில் ஒருவருமறியக் கூடாத ஒரு பாஷையில் சில சொற்களும் எழுதப்பட்டிருந்தன. கல்விமான் அதையும் பார்த்தான். பிறகு அத்திரையி னெருபுறஞ் சென்று அதைச் சற்று விலக்கி உள்ளே பார்த்தான். விலையுயர்ந்த அணிகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு சபாமண்டபம் அவன் கண்ணுக்குத் தெரிந்தது. அம்மண்ட

பத்தின் ஒரு பக்கத்தில் அநேகர் வரிசை வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள்.

அவர்களைப் பார்த்த வுடனே கல்விமானுக்கு மிகுந்த நடுக்கம் உண்டாயிற்று. கை கால்கள் சோர்ந்தன. பின் சற்றுத் தேறுதலடைந்து நின்றான். அச்சமயத்தில் திடீரென்று ஒரு பெருங்காற்று வீசியது. அங்கிருந்த விளக்குகளெல்லாம் அவிந்து விட்டன. கல்விமான் உள்ளம், மறுபடியும் பதை பதைத்தது. "நாம் வந்த வழியைக் கைகளால் தடவிக்கொண்டு திரும்பிப் போய்விடலாம்" என்ற எண்ணமும் அவன் மனத்திலுதித்தது. ஆயினும் பொருளாசை அவனைத் திரும்பிவர விடாமல் தடுத்தது. சில நேரம் நின்று பார்த்தான்; மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தவர்களில் ஒருவரேனும் வாய்திறந்து பேசாமையால், ஒருவேளை இவை மரப் பதுமை செய்த சித்திரக்காரனால் செய்யப்பட்ட உருவங்களாக இருக்கு மென்று தீர்மானித்து அச்சம் நீங்கி மண்டபத்தினுள்ளே சென்றான். அங்கு ஓரிடத்தில் நெருப்பைப்போன்ற ஒரு மாணிக்கக்கல் வைக்கப் பட்டிருந்ததனால், காற்றினால் விளக்கவிந்தாலும் வெளிச்சமாகவே யிருந்தது. கல்விமான் தைரியமாக அவ்வுருவங்களை அணுகினான். அப்பொழுது அவைஉண்மையான மனித உருவங்களென்று நிச்சயமாகக் கல்விமான் அறிந்தான்; ஆயினும் அவை இறந்துபோனவர்

களின் உருவங்களாக இருந்தனவே தவிர உயிரு டன் கூடிய உருவங்களாக இல்லை. அதனாலவன் இன்னும் அதிக தைரியமடைந்து அவ்வுருவங் களை ஒவ்வொன்றாக ஊன்றிப்பார்த்துக் கொண்டே வந்தான். அப்பொழுது அவ்வுருவங்களுக்கு நடு வில் நரைத்து நீண்டதாடியையுடைய ஒரு அர சன், தன் மனைவியோடு சிம்மாசனத்தில் உட்கார்ந் திருப்பதையும், அவர்கள்மீது ஆடை ஆபரணங் கள் விளங்குவதையும் கண்டு வியப்புற்று நின்றான். "இவ்வரசி அணிந்திருக்கும் ஆபரணங்களில் ஏதாவது இரண்டு கிடைக்குமாயினும் குபே ரனைப்போல் வாழலாமே; இவ்வளவுங்கைக் கொண்டால் எனக்கு உலகத்தில் யார் ஒப்பாவார் கள்" என்று தானே நினைத்து மகிழ் வடைந் தான். பின் அவன் நாற்புறங்களிலுஞ் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். அரசனும் அரசியும் அமர்ந் திருந்த சிம்மாசனத்திற்குப் பிறகு, பல பிரபுக்கள் பொன் தட்டுக்களில் மதுரமான உணவுகளை ஏந் திக்கொண்டு நிற்பதையும், அவர்களுக்குப் பின் போர்க்கோலத்துடன் வீரர்கள் வரிசையாக நின்று காவல் செய்து கொண்டிருப்பதையும், பலநிற மான உடைகளை அணிந்த வேலைக்காரர்கள் கை கட்டி வாய்பொத்திக் கொண்டு தலைவணங்கி நிற் பதையும், இசைபாடுவோர் அரசனுடைய சமு கத்தை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருப்பதை யும் கல்விமான் மீண்டும் பார்த்தான்.

பிறகு, அரசன் வீற்றிருந்த இடத்திற் கெதிரில் ஒரு போர் வீரன் வில்லைக் கையிலேந்தி அம்பு தொடுத்து மேலே தொங்கவிட்டிருக்கின்ற, விளக்கைப் போல் ஒளிவீசும் மாணிக்கத்தைக் குறிபார்த்து எய்பவனைப் போல நின்றான். அவனையும் கல்விமான் பார்த்தான்.

கல்விமான் தன்னெதிரில் தோன்றிய எல்லா வுருவங்களையும் நன்றாக ஊன்றிப் பார்த்தபோது, அவை யெல்லாம் இறந்து போனவர்களின் உருவங்களென்றும், ஏதோ ஒருவகையினால் உயிருள்ளவை போல் பக்குவப் படுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன வென்றும் அறிந்து கொண்டான்; பிறகு அம்மண்டபத்தை ஏன் இவ்வாறு அமைத்திருக்க வேண்டும் என்று யோசனை செய்தான்; அதை அறிந்து கொள்ளக் கூடிய எழுத்துக்கள் எவ்விடமாவது எழுதப்பட்டிருக்கிறதா? என்று சுற்றித் திரிந்தான்; அவன் கண்ணுக்கு ஒன்றும் புலப் படவில்லை.

## III

இவ்விதமாகச் சிலநேரம் அங்குள்ள புதுமைகளைக் காண்பதிலேயே அவன் எண்ணம் சென்று விட்ட படியால், அதுவரையில் அங்குள்ள விலையுயர்ந்த பொருள்களில் ஒன்றையேனும் அவன் எடுக்கவில்லை. நாழிகை செல்லச்செல்ல அவனுடைய அச்சமெல்லாம் பறந்துபோய்விட்டது; பொன்னைப்பற்றிய ஆசை பெரிதாகி விட்டது;

அப்பொழுது கல்விமான் "இனி நாம் தாமதித்தால் பொழுது விடிந்துபோகும். ஊரிலுள்ளவர்கள் இவ்வழியைக் கண்டு பிடிப்பதற்கு முன் நாம் வெளியே போய்விட வேண்டும்" என்று தீர்மானித்துத் தான் வந்த வேலையை விரைவாக முடித்துக் கொள்ள எண்ணினன்.

உடனே அவன் தன்னிடமிருந்த தோற்பையை விரித்துக் கீழே வைத்தான். அரசன் அணிந்திருந்த முடியையும், முத்துமாலைகளையும், விலையுயர்ந்த மோதிரங்களையும் கழற்றிக் கொண்டான். பிறகு அவன் பக்கத்திலிருந்த அரசியின் மேலுள்ள அரிய ஆபரணங்களையும், மற்றவர்கள் மேலுள்ள அணிகளையும், பொன்வேலை செய்த ஆடைகளையுங் கவர்ந்தான்.

பின், அம் மண்டபத்தில் தான் கண்ட விலைமதித்தற்கரிய பொருள்களையும் எடுத்துக் கொண்டான். எல்லாவற்றையும் தன் தோற்பையில் போட்டுக் கட்டிப் பெருஞ்சுமையாகத் தோளில் தூக்கிக்கொண்டு திரும்பினன்.

திரும்பிக் கொஞ்சதூரம் வந்தவுடன் ஒரு சுவரில் மரகதக் கல் ஒன்று பதித்திருக்கப் பார்த்து, அதையுங் கவர்ந்துகொள்ள விரும்பினன்.

"இவ்வளவு பெருஞ் சுமையைத் தூக்கிக் கொண்டுபோகும் எனக்கு இம் மரகதத்தால் என்ன சிரமம் ஏற்படப் போகிறது; இம்மரகதம் எனக்குக் கிடைத்து விடுமாயின் இம்மண்ணுல

கத்திலுள்ள எல்லாரையும் என் ஏவலாளர்களாகச் செய்து கொள்வதில் தடை யென்ன? இதனையுங் கொண்டுபோவதே தகுதி" யென்று எண்ணி, முதுகின் மேல் தூக்கிக் கொண்டு வந்த மூட்டையைக் கீழே யிறக்கி வைத்துத் தன் இரண்டு கைகளாலும் சுவரில் பதிக்கப் பட்டிருந்த மரகதத்தைப் பேர்த்தான்; அது எளிதில் வரக்கூடியதாயில்லை; பிறகு தன்னாலான மட்டும் மூச்சை யடக்கிப் பலமாக இழுத்தான்; அப்பொழுதும் அதனைப் பேர்த்தெடுக்க அவனால் முடியாமற் போய் விட்டது; இப்படி இருக்கும்போது பின்புறந் திரும்பிப் பார்த்தான்; திரும்பினவுடன் அலறிக் கீழேவிழுந்தான். ஏன் எனில் தான் முன் கண்ட போர் வீரனுருவம் வில்லை வளைத்து அம்பெய்யுந் தருவாயில் நிற்கக் கண்டான்; தன் மூட்டையைத் தூக்கிக் கொண்டு ஓடிவிடலா மென்று நினைத்தான்; இதற்குள்ளாகப் போர் வீரன் கையிலுள்ள அம்பினால் மேலே தொங்க விடப்பட்ட மாணிக்கம் அறுந்து கீழே விழுந்தது; எங்கும் இருள் மூடிக் கொண்டது; கல்விமான் புண்பட்ட நெஞ்சமுடையவனாய்த் தரையில் புரண்டு அழுதான்; இளமை முதற் கொண்டு நடந்தவைக ளெல்லாம் ஒவ்வொன்றாக அவனுடைய நினைவுக்கு வந்தன; சற்று நேரத்தில் அச்சந் தெளிந்து, கைகளால் வழியைத் தடவிக் கொண்டு வெளியே போய் விடலா மென்று எழுந்தான்; அதற்குள் இவன்

வந்த வழியும் மூடப்பட்டு விட்டது ; உள்ளே யிருந்த கல்விமான் அலைந்தலைந்து வழி தெரியா மல் திகைத்துக் கீழே விழுந்து மாண்டான்.

இது நடந்த அன்றிரவு விடிய இரண்டு நாழிகை யிருக்கும் பொழுது வளம்பொழி நக ரத்திற் பெருங் காற்றடித்தது; பெரு மழை பெய்து எங்கும் வெள்ளக் காடாயிற்று ; இடியிடித்துப் பூமியை அதிரச் செய்தது ; அந்த இடி கல்வி மான் பேர்த்த செம்புத் தகட்டை மறுபடியும் அது இருந்த இடத்திற் கொண்டு போய்ச் சேர்த்தது ; மரப் பதுமையும் இடி விழுந்து அழிந்தது ; வெள்ளம் புரண்டு வந்து கல்விமான் தோண்டிய மண்ணைக் குழியிற் சேர்த்து சமநிலமாகச் செய் தது. அதனால் கீழே யிருக்கும் இரகசியத்தை ஒருவருமறிய முடியாமலே போய் விட்டது.

---

## 4. தொட்ட தெல்லாம் பொன்.

### I

நெடுநாள்களுக்கு முன்பு ஒரு அரசன் இருந்தான் ; அவனுக்கு மைதாஸ் என்றுபெயர் ; அவனுக்கு ஒரே ஒரு பெண் பிறந்து அருமை யாக வளர்ந்து வந்தது ; அப்பெண்ணுக்குக் கனக தேவி யென்று பெயர். மைதாஸ் மிகுந்த பேராசை யுடையவன் ; இரவும் பகலும், எந்த நேரமும் அவனுக்குப் பொன்னைத்தவிர வேறு

ஒன்றினிடத்தும் மனஞ் செல்லுவதில்லை; அவன் தன்மகள் கனகதேவி என்பவளிடத்தும் அதிக ஆசையுடையவன்; அதனால் தான் இறந்து போவதற்குள் தன்மகளுக்கு மிகுந்த பொருளைத் தேடி வைத்துவிட வேண்டுமென்று தீர்மானம் செய்திருந்தான்.

மைதாஸ், மாலைக்காலத்தில் சூரியன் அஸ்தமிக்கும்போது, ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து "பொன்னிறமாகத் தோன்றுகிற இந்த மேகங்களெல்லாம் உண்மையான பொன்னாகி என்னிடம் வருமானால் நான் மிகுந்த பணக்காரனாவேனே" என்று தனக்குள் சிந்திப்பான்.

அவனுக்குப் பொருளாசை யதிகமாயிருந்தாலும், தோட்டங்களில் பூஞ்செடிகளும், அழகான மரங்களும் வைத்து வளர்த்து வந்தான். அப்பூந்தோட்டத்தில் இனியமணமும் அழகிய நிறமும் பொருந்திய பூக்கள் மலர்ந்திருக்கும்; அடிக்கடி அவன் அத்தோட்டத்திற்குப் போய் மலர்ந்த பூஞ்செடிகளையும், தழைத்த மரங்களையும் கண்டு களிப்பான்; அவன் மகள் கனகதேவியும் தகப்பனோடு கூடப்போய் பல அழகிய பூக்களைப்பறித்து வந்து அவனிடங் கொடுப்பாள்; இன்னும் சங்கீதம் பாடுகின்றவர்களையுங் கூட்டிப் பாடச்செய்து இனிய இசையைக் கேட்டு மகிழ்வான்; ஆயினும் பொருளாசை வர வர அதிகப் பட்டுக்கொண்டே வந்ததனால் மேற்கண்ட

இன்பங்களெல்லாம் அவனுக்கு வெறுப்பாகத் தோன்றின; இசையைக் கேட்டு மகிழ்தலைவிட பொன்னேசையைக் கேட்டு மகிழ்தலே மேலான தென்றெண்ணினன்; கனகதேவி கொன்றை, சூரிய காந்தி முதலிய பூக்களைப் பறித்துக் கொண்டு தந்தையிடம் வருவது வழக்கம்; அவ்வழக்கப்படி வரும் பொழுது பொன்னுசை கொண்ட மைதாஸ் "மகளே! நீ கொண்டு வந்த இம்மஞ்சள் நிற மான பூக்களால் யாருக்கு என்ன நன்மை யுண்டாகும்? இவை மஞ்சள் நிறமான பொன் மலராகவே யிருக்குமானல் எல்லாரும் விரும்பிக் கையிற் பிடித்துக் கொள்வார்கள்; ஒரு பயனுமில்லாத இப்பூவின் மேல் உனக்கு ஏன் இவ்வளவு ஆசை?" என்று சொன்னன்.

இப்படியே அவனுடைய பொருளாசை நாளுக்கு நாள் ஓங்கி வளர்ந்தபடியால், அவன் பொன்னைத் தவிர வேறு எந்தப் பொருளையும் கண்ணுற் பார்க்கவும் விரும்பாதவனுனன்; கையால் தொடவும் உடன்படாதவனுனன்.

இதனுல் அவன் பகற்பொழுதெல்லாம் தன்னுடைய பணக்குவியல் நிறைந்து கிடக்கும் சுரங்க அறையில் தனியாயிருந்து காலங் கழிப்பான்; அவ்விடத்தில் பணங்களை எண்ணிப் பார்ப்பதும், வரிசை வரிசையாக அடுக்கி வைத்துப் பார்ப்பதும், மூலைகளிற் கிடக்கும் பொன் பாத்திரங்களையும், பொன் பாளங்களையும், வெளிச்ச

முள்ள இடத்தில் கொண்டு வந்து பார்ப்பதும், மறுபடியும் அவைகளை முன்னிருந்த இடத்திற் கொண்டு போய்ச் சேர்ப்பதும், அவைகளைப் பந்து போல் உயரத் தூக்கி எறிந்து, கீழே விழு வதற்குள் கையாற் பிடிப்பதும், "இவை யெல்லாம் எனக்கே சொந்தமான பொருள்களல்லவா ? நம் மைப் போல் செல்வ முடையவர்களும், அதிர்ஷ்ட முள்ளவர்களும் வேறு யார் ?" என்று நினைத்து மகிழ்வதுந்தான் அவனது வேலை. அவன் சந் தோஷமாகக் காலங் கழிக்க விரும்பினால் சுரங்க அறையைத் தவிர மற்ற இடங்களுக்குப் போக மாட்டான். அவன் ஒவ்வொரு சமயத்தில் தன் னுடைய செல்வத்தைப் பற்றி மகிழ்ச்சி யடைந் தாலும், தான் விரும்பிய அளவு செல்வ மில்லை யென்றே பல சமயங்களில் கவலைப்படுவான்.

"இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பொருள் களும் பொன்னாகவே யிருந்து, அவை யெல்லாம் என்னுடைய பொருளாக இருக்க வேண்டும்" என்று அவன் அடிக்கடி நினைத்துக் கொள்வான்.

இப்படிப் பலவிதமான எண்ணங்களை எண்ணிக்கொண்டே பணக்கவலையுடன் காலங் கழிக்கும் மைதாஸ், ஒரு நாள் வழக்கம்போல் தன் சுரங்க அறையிற் போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டு தனியாக உள்ளேயிருந்து சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது திடீ ரென்று தனக்கெதிரில் ஒரு நிழல் தோன்றக்

கண்டு திடுக்கிட்டு எழுந்து பார்த்தான். இளம் பிராயமும் மிகுந்த வனப்புமுடைய ஒரு மனிதன், மலர்ந்த முகத்தோடு தன்னெதிரில் நிற்கக் கண்டு அவன் தனக்குள் யோசிக்கலானான்.

"நான் இச் சுரங்க அறையிற் பிரவேசித்த பொழுது கதவைத் தாழிட்டுக்கொண்டுதானே வந்தேன்; அப்படியிருக்க இவன் சாமானிய மனிதனாயிருந்தால் எப்படி உள்ளே வரமுடியும்? ஆகவே இவன் தேவர்களில் ஒருவனா யிருக்கவேண்டும்; இவனுடைய மலர்ந்த முகத்தைப் பார்த்தால் இவன் நமது பொருளை அபகரிக்க வந்தானென்று எண்ணுவதற்கில்லை; நம்முடைய பொருளாசையைத் தீர்ப்பதற்காகவே வந்திருக்க வேண்டும்" என்று சிந்தித்துக்கொண்டே யிருந்தான். இருக்கும் பொழுது உள்ளேவந்த மனிதன், அச்சுரங்க அறை முழுவதையுஞ் சுற்றிப்பார்த்து, மைதாஸ் என்னும் மன்னனை நோக்கி, "நண்பனே! நீ ஒரு பெரிய பணக்காரன்; இந்த உலகத்தில் வேறு யாரும் இவ்வளவு பணஞ் சேர்த்து வைத்திருப்பார்களென்று எனக்குத் தோன்றவில்லை" என்றான். இம் மொழிகளைக் கேட்ட மைதாஸ் சற்று வெறுப்படைந்தவன் போல் "ஆம்; சிறிது பணம் சேர்த்திருக்கிறேன்; இப்பணஞ் சேர்ப்பதற்கு என் வாழ்நாள் முழுதுஞ் செலவழிந்தது; அதை நினைக்கும்போது நான் அவ்வளவு பெரிய பணக்காரனாகி விட்டேன் என்று சொல்லுவதற்கில்லை;

ஒருவன் ஆயிரம் வருஷம் உயிருடனிருப்பா ஞயின், ஒரு வேளை அவனுக்கு வேண்டிய பணத் தைத் தேடிக்கொள்ளக் கால மிருக்குமென்று நினைக்கிறேன்" என்று பதில் சொன்ஞன்.

மைதாஸ் கூறிய மொழிகளைக் கேட்ட அப் புதுமனிதன் ஆச்சரியமுற்று, "இவ்வளவு பொன் னைச் சேர்த்தும், நீ திருப்தியடைய வில்லையா?" என்று கேட்க, "இல்லை" என்றே அவன் தலை யசைத்துக் கூறினுன்.

இதைக் கேட்டதும் புது மனிதன் புன் முறு வல் செய்து, "எதுதான் உனக்குத் திருப்தியளிக்கு மென்பதையறிய விரும்புகின்றேன்; உன் மனத்தி லுள்ளதை உள்ளபடி சொல்" என்று அன்போடு கேட்டான்.

மைதாஸ் "இந்த மனிதனுடைய தேக ஒளியையும் புன் முறுவலோடு மலர்ந்த முகத்தை யும், அன்பாகப் பேசும் மொழிகளையும் பார்த்தால் எனது எண்ணம் எதுவாயினும் அதைப் பூர்த்தி செய்வா னென்றே நிச்சயமாகத் தோன்றுகிறது; பொன்னை மலை மலையாக அடுக்கித் தரவேண்டு மென்று கேட்டாலும் அப்படிச் செய்யக் கூடியவ னென்பதிற் சந்தேகமே யில்லை; இவன் வந்தது எனது நல்ல காலமே; இந்தச் சமயத்தைக் கைவிடவே கூடாது" என்று பலவாறு யோசித்து ஏதோ ஒன்றைத் தன் மனத்தில் முடிவு செய்து கொண்டு அம்மனிதனைப் பார்த்தான்.

அம்மனிதன் " நல்லது ! மைதாஸ் ! நீ உன் மனத்திற்குத் திருப்தி தரக் கூடிய வழியைக்கண்டு பிடித்து விட்டாய் என்று நினைக்கிறேன் ; அப்படியானல் தடை யில்லாமல் இப்பொழுதே சொல்" என்றான்.

மைதாஸ், "ஐயனே ! பலவகையில் வருந்தி யுழைத்துப் பொருள் தேடிக் களைத்துப்போய் விட்டேன் ; ஆயினும் இன்னும் என் மனந் திருப்தி யடையவில்லை ஆதலால், இனி நான் தொட்டதெல்லாம் பொன்னாகும்படி வரமளிப்பாய்" என்று கேட்டான்.

வந்த மனிதன், "நண்பனே ! யாவராலும் நினைக்க முடியாத இந்த வரத்தை நீ கேட்டமையால், நீ மிகவுங் கெட்டிக்கார னென்பதற்கு ஐயமே யில்லை ; இதனால் உனக்குத் திருப்தி யுண்டாவது நிச்சயந்தானா?" என்றான். மைதாஸ், " அதற்கொரு சந்தேகமு முண்டோ ? அப்பொழுதுதான் நான் பூரண சந்தோஷ மடைவேன் " என்றான்.

புது மனிதன், " நீ தொட்டதெல்லாம் பொன்னாக மாறுவதைப்பற்றி ஒரு சமயத்திலும் வருத்தப் படாமலிருப்பாயா ?" என்று மறுபடியுங் கேட்டான்.

மைதாஸ், "நான் ஒரு பொழுதும் வருத்தப் படமாட்டேன் ; அது ஒன்றுதான் நான் திருப்தி யடையும் வழி" என்றான்.

அப்படியானால் "நாளைச் சூரியோதய முதல் நீ தொட்ட தெல்லாம் பொன்னாகும்" என்று வரங் கொடுத்துவிட்டு, அவனிடம் விடை பெற்று மறைந்தான் புது மனிதன்.

## II

அன்றைய தினம் இரவு அவன் தூங்கினானோ இல்லையோ அது நமக்குத் தெரியாது; ஆனால் எப்பொழுது விடியும் என்ற எண்ணமே அவன் உள்ளத்திற் குடிகொண்டிருந்த படியால் மறுநாள் பொழுது விடியுமுன் கண் விழித்துப் பக்கத்திலுள்ள பொருள்களைத் தொட்டுப் பார்த்தான். அப்பொழுது சூரிய உதயமாகாத படியால் அவை பொன்னாக மாறாமல் முன்னிருந்தது போலவே யிருந்தன.

அப்பொழுது மைதாஸ், "நாம் நேற்று சுரங்கத்திற் கண்ட மனிதனோடு பேசியவை கனவோ, நனவோ? உண்மையாகில் இவை ஏன் பொன்னாக வில்லை? ஒரு வேளை நம்மை ஏமாற்றுதற்காகச் சொல்லி மறைந்து விட்டானோ? அவன் உண்மையாகச் சொல்லியிருப்பானாயின் கூடிய சீக்கிரத்தில் வருத்தமின்றிப் பெரும் பொருளைச் சேர்த்திருக்கலாமே; இது வரையில் கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்தது போல் இனி மேலுஞ் சேர்க்க வேண்டி யிருக்கிறதே தவிர நாம் இரவு முழுதும் எண்ணிய எண்ணம் பாழாகப் போய்விட்டதே" என்று ஏக்கங் கொண்டு படுக்கையிலேயே கிடந்

தான்; அந்தச் சமயத்தில் அவன் படுத்திருந்த அறையின் ஜன்னல் வழியாகச் சூரியனொளி அவன் மேற்பட்டது. பட்டவுடனே அவன் உடம்பிற்போர்த்திருந்த ஆடைகளெல்லாம் பொன்னுடைகளாக மாறி ஒளி வீசின; மைதாஸ் திடீரென்று கண்ணைத் திறந்தான்; பொன்மயமாக விளங்கும் ஆடையைக் கண்டான்; அளவில்லாத ஆனந்தங் கொண்டான். பின், "புது மனிதன் சொன்னவை உண்மையே; சூரியன் உதிக்காமலிருந்தபடியால் நாம் முன்னே தொட்டவை பொன்னாக மாறவில்லை; அது நம்முடைய குற்றமே" என்று எண்ணினான். பிறகு எழுந்து தன் கையிலகப்பட்ட எல்லாப் பொருள்களையுந் தொட்டுக் கொண்டே போய், தோட்டங்களிலுள்ள பூஞ்செடிகளை யெல்லாந் தொட்டுவிட்டு மாளிகையைச் சுற்றிக்கொண்டு வந்து பார்த்தான்; எல்லாம் பொன்னாக விளங்கக் கண்டான்; பெருமகிழ்ச்சியடைந்தான். மறுபடியும், அவன் தான் படுத்திருந்த கட்டிற் கால்களையும் கட்டிலின் மேற் கட்டியிருந்த பட்டுத் துணியையுந் தொட்டான்; அவைகளும் பொன்னாயின. பின் தான் படிப்பதற்காக அடுக்கி வைத்திருந்த புத்தகங்களைத் தொட்டான். அந்தப் புத்தகத்தி லுள்ள கடிதங்களெல்லாம் பொன் தகடுகளாக மாறின. எழுத்துக்களெல்லாம் மறைந்து போயின.

பிறகு தன்னுடைய ஆடைகளை எடுத்து

அணிந்து கொண்டான். எல்லாம் பொன்னுடை களாகமாறின. ஆயினும், அவை அவனுடம்பிற்கு மிருதுவா யிராமல் சற்றுக் கடினமாகவும் கன மாகவும் இருந்தன. ஆனால் பொன்னாசை மிகுதி யால் இதை அவன் உணரவில்லை.

அதற்கப்புறம், தன் மகள் கனகதேவி தன் கையாற் செய்த சித்திரங்க ளமைந்த பட்டுக் குட்டையை எடுத்தான். அதுவும் பொன்னுடை யாக மாறிற்று. ஆனால் அவனுக்கு அது மாத் திரம் சற்று வெறுப்பாகத் தோன்றியது; ஏன் என்றால் தன் மகள் மிகவுங் கஷ்டப்பட்டுச் செய்த சித்திர வேலைகள், செய்தபடியே யிருக்க வேண்டுமென்பது அவன் எண்ணம். மறுபடியும், "இவ் வற்பமான காரியங்களுக் கெல்லாம் நாம் கவலையடைவது சரியல்ல" என்று தேறுதலடைந் தான்.

மைதாஸ், தன் மாளிகையிலும், பூந்தோட்டங் களிலும் பலதரஞ் சுற்றிப்பார்த்தும், தான் தொட் டவை பொன்னுவதை இன்னும் பார்க்கவேண்டு மென்ற ஆசை உடையவனாயிருந்தான். அக்காலத் தில் அரசர்கள் மூக்குக்கண்ணாடி போடலாமே தவிர, வேறு யாவரும் மூக்குக்கண்ணாடி போடக் கூடாது. மைதாஸ் தானும் அரசனாயிருந்தபடியால் தன் மூக்குக் கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டு எல்லாம் பொன்னாக மாறியதை உற்றுப் பார்க்க நினைத்துக் கண்ணாடியை எடுத்து மூக்கிற்ப

போட்டான். அதுவும் உடனே பொன்னுக மாறி ஒளி மழுங்கிவிட்டது. இனி நாம் கண்ணுடி போட்டுக்கொள்ள முடியாதென்ற எண்ணம் அவனுக்குண்டாயிற்று. இதனுலும் அவன் சிறிது கவலை யடைந்தான். அடைந்தும் அவன் மனத் தளர்ச்சி யடையவில்லை. "இதை நாம் ஒரு பிரமாதமாகக் கொண்டு கவலையடையக் கூடாது; தொட்டதெல்லாம் பொன்னுகச் செய்கின்ற ஒரு அற்புதமான சக்தியைக் கைவரப் பெற்ற நாம் இந்தக் கண்ணுடியை யிழந்ததனுல் என்ன கெட்டுப் போய் விடும்? கண்பார்வையை யிழப்பதாயினும் அதுவும் இதைவிடப் பெரிதல்லவே; இப்பொழுதோ நாம் பார்வையை இழந்து விடவில்லை; சாதாரணமான பொருள்களைப் பார்க்கக் கண்ணுடி வேண்டு மென்ற அவசியமுமில்லை; புத்தகங்களைப் படிக்க முடியாவிட்டால் நம் கனக தேவி வளர்ந்த பிறகு அவளைப் படிக்கச் சொல்லிக் கேட்டு ஆநந்த மடையலாமே" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவன் மேல் மாடியிலிருந்து இறங்கி வரும் பொழுது அவனுடைய கால்பட்ட படிக்கட்டுகளும், கைபட்ட கைப்பிடிகளும், கதவுகளின் பித்தளைப் பூண்களும் பொன்னுக மாறியதனுல், மாளிகை முழுதும் தன் கால் கைகள் படும்படி சுற்றிச் சுற்றித் திரிந்து இளைப்புற்ருன்.

பின் அவ்விளைப்பினுல் ஓரிடத்தில் உட்

கார்ந்து காலையுணவருந்த விரும்பினுன். அரசன் குறிப்பை யறிந்த சமையற்காரர்கள், அறுசுவை யுடன் கூடிய உணவுகளைக் கொண்டு வந்து எதி ரில் வைத்தார்கள். எவ்வளவு அதிகமான பசி யுடையவனு யிருந்தாலும், தன் மகள் கனக தேவி யில்லாமல் தனியாக உண்ணும் வழக்கம் அவனி டத்தில் இல்லை. அதனுல் அன்றைய தினமும் தன் மகளை அழைத்து வரக் கட்டளை யிட்டான். சற்று நேரத்திற்கெல்லாம் கனக தேவி ஒரு பொன் ரோஜாமலரைக் கையிலெடுத்துக் கொண்டு அழுத கண்ணீருடன் தந்தையிடம் வந்து சேர்ந்தாள். ஒருநாளும் அழாத தன் மகள் இன்று அழுது கொண்டு வருவதைப் பார்த்த மைதாஸ் வியப்பெய்தி, அவளுக்கு ஒரு ஆச்சரியமான நிகழ்ச்சியைக் காட்ட விரும்பி, அவள் உண்ணும் வெள்ளிப் பாத்திரத்தைத் தன் கையால் தொட்டுப் பொன் பாத்திரமாகச் செய்தான். கனக தேவி அதையுங் கவனிக்காமல் நிற்பதைக் கண்டு " நீ என் இவ்வாறு அழுகின்ருய்" என்று கேட்டான்.

கனகதேவி, தன் தந்தையின் கைபட்ட தனுல் பொன்னுக மாறிய ஒரு ரோஜாமலரை அவன் கையிற் கொடுத்து, "தந்தையே! நான் இன்று காலையில் எழுந்தவுடனே தோட்டத்திற் குப்போய் சில ரோஜா மலர்களைப் பறித்துக் கொண்டு வரலாமென்று நினைத்துத் தோட்டத்திற் குப் போனேன். போய்ப் பார்த்தபொழுது, இனிய

மணமும், நல்ல நிறமுமுள்ள எல்லா ரோஜா மலர் களும் மணமும் நிறமும் மாறுபட்டு ஒரே மஞ்சள் நிறமாகத் தோன்றின. இதை நினைக்க எனக்குத் தாங்க முடியாத விசனமாக இருக்கின்றது'' என்முள்.

மைதாஸ், "என்னருமை மகளே! நீ இதற் காகவா அழுகின்முய்? நன்முயிருக்கிறது உன் செய்கை! இவை எவ்வளவு அழகாயிருக்கின்றன! இந்தப் பொன் மலர்களா உன்னை அழச்செய்தன?" என்று சொல்லி அவளைச் சமாதானப் படுத்தினன்.

ஆனல், அவன் அம் மலர்கள் பொன்னுக மாறியதற்குத் தானே காரணமென்பதை நாணத் தால் அவளிடஞ் சொல்லாமல் மறைத்தான். பின் தன் மகளைப்பார்த்து, "கனகதேவி! நீ உட்கார்ந்து உன் உணவைச் சாப்பிடு; உன் கையிற் கொண்டு வந்த ரோஜா மலர் எத்தனை வருஷங்களாயினும் அப்படியே யிருக்கும்; இதைக்கொண்டு சாதாரண ரோஜா மலர்கள் எவ்வளவு வேண்டுமாஞலும் வாங்கலாம்; நீ விசனப்படாமல் சாப்பிடு" என்முன். கனகதேவி, "இப்படிப்பட்ட மலர்கள் எனக்கு வேண்டவே வேண்டாம்; இதில் வாசனையே கிடையாது; இதனுடைய இதழ்கள் கடினமாய் இருக்கின்றன; மோந்து பார்த்தால் என்மூக்கை வருத்துகின்றன;" என்று சொல்லிக் கையிலுள்ள மலரை வெறுப்பாகக் கீழே எறிந்துவிட்டு உண வருந்தத் தொடங்கினுள்.

# III

தான் தொட்ட தெல்லாம் பொன்னுவதைக் கண்ட மைதாஸ், தனது அரண்மனையில் தங்க மாக மாறிய கலன்களையும், பிற பொருள்களையும் எவ்விடத்திற் பத்திரப்படுத்திவைப்ப தென்பதி லேயே தன் மனம் அழுந்திக் கிடந்தமையால், சற்று நேரம் பொறுத்து, உண்பதற்கு வைத் திருந்த இனியபாலை எடுத்துக் குடித்தான். கை பட்டவுடன் அப்பால் மஞ்சள் நிறமாகி வாயி லூற்றும் போது பொன் கட்டியாக வாய்க்குள் விழுந்தது.

இதைக்கண்ட மைதாஸ், ஆச்சரியமும் திகிலுமடைந்து, ஓஹோ! என்று கூச்சலிட்டான். இவ்வாறு தந்தை கூச்சலிட்டதைப் பார்த்த கனக தேவி, "தந்தையே! என் கூச்சலிட்டீர்கள்?" என்று கேட்டாள். அதற்கு அவன் ஒன்று மில்லை பால் சூடு ஆறிப்போகுமுன் சாப்பிடு என்றான்.

பின், பக்குவமாகச் சமைபல் செய்த ஒரு மீனைக் கையில் எடுத்தான். அவன் இன்னும் அதிக திகி லடையும்படி அதுவும் பொன் மீனுக மாறிற்று. கையினுல் தொடுதற்கு உறுதியாகவு மிருந்தது.

பின், மைதாஸ், "நான் எப்படி உணவு கொள்வே னென்பது எனக்கே விளங்கவில்லையே" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். மீண் டும் ஒரு அப்பத்தைக் கையி லெடுத்தான். அது

வும் பொன்னுயிற்று. தனக் கெதிரிலிருந்து சாப் பிடுகின்ற தன் மகளிடத்தும் அவனுக்குப் பொரு மை உண்டாயிற்று. அதனால் அவள் சாப்பிடுவ தைக் கூர்ந்து பார்த்தான் மைதாஸ்.

"இவ்வளவு மதுரமான உணவுகள் எனக் கெதிரில் இருந்தும், ஒன்று கூட என்னால் உட் கொள்ள முடிய வில்லையே; எப்படிப் பசியாறு வேன்" என்று அவன் ஏக்கமுற்றான்.

அப்பொழுது அவனுக்குப் பசி நோய் வரவர அதிகப்பட்டுக் கொண்டே யிருந்தது. இந்த உணவுப் பொருள்களை எடுத்துக் கையில் வைத்திருக்காமல் விரைவாக எடுத்து உடனே வாயில் போட்டு விழுங்கி விடலாம் என்று நினைத்தான். அப்படியே ஒரு சூடான உருளைக் கிழங்கை எடுத்து வாயிற் போட்டான். அவன் பெற்ற பொல்லாத வரம் உருளைக் கிழங்கை மாத் திரம் விட்டுவிடுமா? அது பொன் கட்டியாக மாறி அவன் நாக்கையுஞ் சுட்டுவிட்டது; சூடு பொறுக்க மாட்டாமல் எழுந்து குதித்தான்.

கனக தேவி, "அப்பா! அப்பா! ஏன் எழுந்து விட்டீர்கள்? நாக்கைச் சுட்டுக் கொண்டீர் களோ?" என்று கேட்டாள்.

மைதாஸ் "அன்பு மிகுந்த மகளே! உன் தந் தையின் கதி எப்படியாகுமோ; சொல்ல முடியாது" என்று பதிலளித்தான்.

மாணுக்கர்களே! இப்படிப்பட்ட ஒரு பரி

தாபமான நிலையும் உண்டோ? யாவரும் விரும் பக்கூடிய அறுசுவையுண்டிகள் தன்முன்னிருக்க, அவன் ஒரு கடுகளவும் உண்ண முடியாமற் போய்விட்டது.

கூலி வேலை செய்து கூழைக் குடித்து வாழும் ஒரு ஏழைக் குடியானவனும், பொன்வரம் பெற்ற மைதாஸை விட உயர்ந்த வாழ்வுடையவன் என் பதில் ஐயமும் உண்டோ?

காலையிலேயே அவனுக்குப் பசி அதிகமா யிருந்ததென்றால் மத்தியான வேளையில் இன் னும் அப்பசி அதிகப்படுமே தவிர குறைந்து விடுமா? என்பதை நினைத்துப் பாருங்கள். ஐயோ! பாவம்; உணவின்றி அவன் எத்தனை நாள் உயிர் வாழமுடியும்? இது நிற்க. மைதாஸ் பலவிதமான எண்ணங்களை எண்ணி எண்ணி நெஞ்சம் புண் ணாயினான். உலகத்திலுள்ள எல்லாப் பொருள் களையும் விட மேலாக மதிக்கத் தகுந்தது செல் வந்தானே? என்ற சந்தேகமும் அவனுக்கு உண் டாயிற்று. ஆனால் அந்த எண்ணம் அவன் மனத்தை விட்டு அதி சீக்கிரத்தில் ஓடிப்போய் விட்டது; பொன்னாசை மறுபடியும் வந்து குடி கொண்டது.

உணவுக்காகத் தான் பெற்ற வரத்தை விட்டு விட அவன் மனந் துணியவில்லை. காய்ச்சின பாலுக்காகவும், பொரித்த மீனுக்காகவும், வேக வைத்த உருளைக் கிழங்குக்காகவும், இனிய சுவை

நிறைந்த அப்பத்திற்காகவும், அளவு கடந்த பொன்னைச் சேர்க்கும் அருமையான வரத்தை விட்டு விடுவதா? என்று தனக்குத் தானே வினவிக் கொண்டான்.

ஆயினும் தன்னுடைய பசியின் கொடுமையாலும், உண்ண முடியாமல் அவஸ்தைப்பட்ட விபரீத நிலையினாலும், மனக்கலக்க மடைந்து பெருமூச்சு விட்டான்.

தந்தை படுந் துன்பங்க ளெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த கனகதேவி, தன் தந்தைக்கு நேர்ந்தது என்ன என்று சிந்தித்துப் பார்த்தாள். ஆயினும் அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவள் தன்னிடத்தை விட்டு எழுந்து ஓடிப்போய்த் தந்தையைத் தழுவிக் கொண்டாள். அன்போடு தன்னைத் தழுவிக்கொண்ட கனகதேவியைப் பார்த்து, "என் அன்பான கனகதேவி!" என்று இன்மொழி புகன்று அவளிடத்துள்ள மிகுந்த அன்பினால் குனிந்து முத்தங் கொடுத்தான். வேந்தன் உதடுகள் கனகதேவியின் முகத்திற் பட்டவுடனே, அவளுடைய முகம் மஞ்சள் நிறமாக மாறிற்று; அவளுடைய கண்களிலிருந்துண்டான நீர்த்துளிகள் மாறிப் பொன் மணிகளாயின. மிருதுவான அவள் உடம்பு பொன் சிலையாகமாறிக் கடினமான உருவமாயிற்று. அவளுடைய கைகால்களும் அசைவற்றன; அதனால் கனகதேவி தன் தந்தை அன்போடு கூப்பிட்டதற்கு வாய்

திறந்து பதில் சொல்ல முடியாதவளானுள்; அவ ளுடைய முகத்தில் அன்பும் விசனமூங் குடிகொண் டிருந்தன.

கனகதேவியின் உருவம் சற்றும் மாறுபட வில்லை; ஆனால் அவள் மன்னனுடன் பேசி, சிரித்து, இன்பம் விளைக்கமாட்டாமல் பொன் சிலை யாக நின்றுள்; இதைக் கண்ட மைதாஸ், கை களைப் பிசைந்தான்; நிலத்தில் விழுந்து புரண் டான்; கண்ணே! மணியே! கனகதேவியே!

பெண்ணுருவகன்றுநீ பொன்னுருவாயினை
இன்மொழி யொன்றும் எனக்குநீ யுரைத்திலை
ஆடுகின்றிலை பாடுகின்றிலை
அப்பா! என்றெனை அன்புடன் தழுவிலை
நான் தொட்ட தெல்லாம் நல்ல பொன்னுகப்
பெற்ற வரத்தாற் பெண்ணையு மிழந்தேன்
என்னநான் செய்வேன் யாரிட முரைப்பேன்
பசிப்பிணி யொழிந்திலேன் பாவி யானேன்
எல்லாப் பொன்னையும் இழப்பினும் உன்னை
முன் போற்காணில் இன்பமாய் வாழ்வேன்.

என்று பலவிதமாகப் புலம்பினுன். அவனடைந்த துன்பங்களை மேலு மேலும் எடுத்துக்கூறல் படிப்பவர்களுக்கும் பெருந் துன்பத்தையே விளைக்கும்.

நிற்க; மைதாஸ் தன்னுடைய எல்லாப் பொருள்களையும் இழந்து ஏழையானுலும்,

தன் மகள் உயிர்பெறக் கூடுமானால் மிகவும் சந்தோஷமாக வாழலாமே என்று தனக்குள் எண்ணினான்.

## IV

இவ்விதமாக மைதாஸ், துன்பக்கடலில் முழுகிக் கரை காணாது வருந்துகையில், முதல் நாள் பொக்கிஷ அறையில் தோன்றி வரமளித்த விண்ணவன் புன்சிரிப்போடு கதவோரத்தில் நிற்பதைக் கண்டான்.

அவ் வாலிபனைக் கண்டதும் மிகுந்த நாணமடைந்தவனாய், தலை குனிந்து அவனோடு ஒன்றும் பேச வாயெழாமல் நின்றான். மைதாஸ் அரசனுடைய பரிதாப நிலையையும், அவன் மகள் கனக தேவி பொன் சிலையாக எதிரில் நிற்பதையும், அரண்மனையிலுள்ள எல்லாப் பொருள்களும் பொன்னாக மாறியதையும் பார்த்து நகைத்தான் வாலிபனாய்த் தோன்றிய விண்ணவன்.

பிறகு வேந்தனை நோக்கி, "நல்லது! நண்பனே! நீ தொட்ட தெல்லாம் பொன்னாகும்படி பெற்ற வரத்தினால் அடைந்த பயன் யாது" என்று வினவினான் விண்ணவன்.

மைதாஸ் அதற்கு விடையாக, "என்னைப் போன்ற துர்ப்பாக்கியவான் இவ்வுலகில் இல்லையென்று துணிந்து சொல்லுகின்றேன்" என்றான்.

விண்ணவன், "நீ என் அப்படிப் பேசுகின்றாய்? நான் கொடுத்தவரம் உனக்குப் பலிக்க

வில்லையோ? துர்ப்பாக்கிய மென்று கவலையுடன் சொல்லக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

மைதாஸ், "எதனிடத்தில் நான் உண்மை யான அன்பு வைத்திருந்தேனோ அந்தப் பொருளை நான் இழந்து விட்டேன்; ஒருவன் உண்மையாக விரும்பக் கூடியது பொன் மாத்திர மன்று" என்றான்.

விண்ணவன், "ஆஹா! அப்படியானால் நேற்று முதற் கொண்டு நீ ஓர் புதிய உண்மையைக் கண்டு பிடித்திருக்கின்றாய்; இப்பொழுது உன்னை நான் ஒன்று கேட்க விரும்புகின்றேன்; தொட்டது பொன்னாகும் வரம் வேண்டுமா? அல்லது ஒரு செம்பு குளிர்ந்த நீர் வேண்டுமா?" என்றான்.

மைதாஸ், "ஐயா! உலர்ந்து போன நாவிற்கு ஒரு செம்பு குளிர்ந்த நீர் கிடைக்குமாயின் அதுவே இவ்வரத்தை விட ஆயிரமடங்கு சிறந்தது" என்றான்.

விண்ணவன் மீண்டும் "உனக்குத் தொட்டது பொன்னாக வேண்டுமோ? அல்லது ஒரு கவளம் உணவு வேண்டுமோ?" என்றான்.

மைதாஸ், "இப்பொழுது ஒரு வாய் உணவு கிடைக்குமானால் அதுவே இவ்வுலகிலுள்ள எல் லாப் பொருள்களிலும் பெரிது" என்றான்.

விண்ணவன், மறுபடியும் அவ்வேந்தனை நோக்கி "அரசனே! தொட்டது பொன்னாக வேண்டுமோ? உன்மகள் கனகதேவி, முன்போல்

உயிர் பெற்று உன்னுடன் இனியமழலை மொழிகளைப் பேசி உனக்கு இன்பமூட்ட வேண்டுமோ?” என்றான்.

மைதாஸ்; “பரந்த இவ்வண்டங்களெல்லாம் பொன்னாக மாறுவதாயினும் அதைவிட என் மகளே எனக்குப் பெரிதாகும்; இவ்வண்டங்களை இழக்க உடன்பட்டாலும் என் காதற் கனக தேவியை இழக்க உடன்படேன்” என்றான்.

இம்மறுமொழிகளைக் கேட்ட விண்ணவன், “நண்பனே! மைதாஸ்! நேற்றை விட இன்று உனக்கு நல்லறிவு தோன்றியிருக்கிறது. தினந் தோறுங் கிடைக்கும் சாதாரணப் பொருள் கள் யாவ ராலும் விரும்பப்படும் செல்வத்தை விட மிக மேலானவை என்றும், மிக விலையுயர்ந்தவை என்றும் நீ அறிந்து கொண்டாய்; இப்பொழுது நீ பெற்ற வரம் மாற வேண்டுமென்று உண்மை யாகவே விரும்புகின்றாயா?” என்றான்.

மைதாஸ், “இந்த வரத்தை நினைத்தாலும் எனக்கு அச்சமாக இருக்கிறது; இந்த வரத்தை நான் மிகவும் வெறுக்கின்றேன்” என்று பதிலளித்தான். இதற்கிடையில் ஒரு கொசு மைதாஸின மூக்கில் வந்து உட்கார்ந்தது; அது சிறிதுநேரத்திற் பொன்னுருண்டையாகிக் கீழே விழுந்தது. அதைப் பாாத்ததும் அவன் இன்னும் அதிகமாக நடுங்கினான்.

தொட்டதெல்லாம் பொன்னாகும்படி வரங்

கொடுத்த விண்ணவன், மைதாஸைப் பார்த்து, "அரசனே ! நீ பெற்றவரம் உன்னை விட்டு நீங்க வேண்டுமாயின், உனது தோட்டத்தினருகே பாய்ந்து ஓடுகின்ற ஆற்றிலே முழுகவேண்டும்; முழுகிவிட்டு ஒரு பாத்திரத்தில் அந்நீரைக் கொண்டு வந்து பொன்னாக மாறிய எல்லாப் பொருள்கள் மேலுந்தெளித்தால் அவை பொன்னுருவமாறிப் பழைய உருவத்தைப் பெறும் ; ஆனால் நீ இதை உள்ளன்புடனும் சிரத்தையுடனுஞ் செய்யவேண்டும்! செய்தால் உன் மனக்கவலைகள் ஒழியும்" என்று சொல்லிவிட்டு அப்பொழுதே மறைந்தான்.

மைதாஸ், உடனே ஒரு மண் பாத்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஆற்றங் கரையை நோக்கி விரைந்து சென்றான். அவன் கைபட்டவுடனே மண் பாத்திரம் பொன் பாத்திரமாக மாறிற்று. அவன் போகும்பொழுது வழியிலுள்ள செடிகளைக் கையால் விலக்கிக்கொண்டே போனான்; கைபட்ட இடங்களெல்லாம் செடியின் நிறம் மஞ்சள் நிறமாக மாறிவிட்டது. ஆற்றங்கரையையடைந்த வுடனே காலிலுள்ள பாதரக்ஷையையுங் கழற்றாமல் அதிக ஆவலுடன் நீரிற் குதித்து முழுகினான். அப்பொழுது ஒரு நாளுமடையாத ஒரு பேரானந்தத்தை யடைந்தான். மனிதத் தன்மை நீங்கிப் பொன்னாசையால் இறுகிய அவன் மனம் இளகி மனிதத்தன்மை பெற்றது.

அப்பொழுது அவன் தண்ணீரில் நின்ற

படியே "இந்த ஆற்று நீர் எனக்கு அதிக மகிழ்ச்சியளிக்கின்றது; இதனால், தொட்ட தெல்லாம் பொன்னாகும் அந்தப் பொல்லாத வரம் என்னை விட்டுத் தொலையும் என்றே நினைக்கின்றேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு கரையேறித் தான் கொண்டுவந்த பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பினான்; ஆற்று நீர் பட்டவுடனே அப்பாத்திரம் பழைய மண் பாத்திரமாயிற்று. அதைப் பார்த்தவுடனே மைதாஸ், விண்ணவன் கூறிய மொழியை நினைத்து, நாம் இனி நன்மை பெற்று வாழ்வோமென்று சந்தோஷமடைந்தான்.

பிறகு அம்மண் பாத்திரத்தை சாக்கிரதையாக எடுத்துக் கொண்டு அரண்மனையை நோக்கி விரைந்து நடந்தான். அரண்மனை வேலைக்காரர்களெல்லாம் அரசனுடைய செயலைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அரசன் அந்நீரைக் கடலத்தனை பொன்னினும் மேலானதாக மதித்துக் கொண்டு வருகின்றானென்பது அவர்களுக்குத் தெரியாது. மைதாஸ், அரண்மனையை யடைந்தவுடனே முதலில் பொன்சிலையாக நின்ற தன்மகள் கனகதேவியின் மீது அந்நீரைத் தெளித்தான். தெளித்த சிறிது நேரத்திற்குள் அவள் பழைய உருவம் பெற்று நின்றாள். தந்தை தன்மேல் ஆற்று நீரைத் தெளித்ததற்குக் காரணம் இன்னதென்று அவளுக்குத்தெரியாது.

தந்தை கைபட்டவுடனே தன் உடம்பு

பொன்னுருவமாக மாறியதை அவள் அறிந்து கொள்ளவில்லை; அரண்மனையில் நடந்த விசேஷங்களையும் அவள் அறியாள்.

பின், கனகதேவி தந்தையைப் பார்த்து "தந்தையே! இன்று நான் அணிந்து கொண்ட புதிய ஆடை சுருங்கும்படி தண்ணீர் தெளித்தீர்களே, அது எதற்காக?" என்று கேட்டாள்.

மைதாஸ் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை; ஆனால் அவன் கனகதேவியைக் கூடவே அழைத்துக் கொண்டுபோய்ப் பூந்தோட்டத்தைச் சேர்ந்தான்; அங்குள்ள பொன் மயமாக மாறிய ரோஜாமலர்களின் மீது ஆற்று நீரைத் தெளித்தான். அந்நீர்பட்டவுடனே எல்லா மலர்களும் பொன்னுருவம் நீங்கிப் பழைய உருவம் பெற்றன; அவற்றின் தொகை ஐயாயிரம் மலர்களுக்குக் குறையாமல் இருக்கும்; அரசனும் மகளும் அம்மலர்களைப் பார்த்துப் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள்.

பிறகு பலவருஷங்களுக்குப் பின், கனகதேவிக்கு மணம் நடந்து மக்கள் பிறந்தனர். அக் குழந்தைகள் வளருங்காலத்தில், மைதாஸ் தான் பொன்வரம் பெற்ற கதையை அவர்களுக்குக் கூறினன். நலம்.

The Royal Printing Works, Mount Road, Madras,—1929.

PU BLISHED BY

B. THIRUVENGADA A RANGANATHAN & Co.

BOOK-SELLER S AND PUBLISHERS

Long Bazaar, VELLORE.